தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

# கரும்புக்கு ஆதரவு விலை: டன்னுக்கு ரூ.3,500 ஆக நிர்ணயிக்க வேண்டும்: மத்திய அரசுக்கு தமிழக விவசாயிகள் கோரிக்கை



தில்லியில் திங்கள்கிழமை நடைபெற்ற கரும்பு விலை நிர்ணயம் தொடர்பான விவசாயிகள் கலந்தாலோசனைக் கூட்டம்.

"பருவ மழை பொய்த்தது, விவசாயக் கூலி மற்றும் வாகன வாடகை உயர்வு உள்ளிட்ட காரணங்களால் கரும்புக்கான ஆதரவு விலையை டன்னுக்கு ரூ. 3,500 ஆக நிர்ணயிக்க வேண்டும்' என்று மத்திய அரசுக்கு அகில இந்திய விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு வலியுறுத்தியது.

மத்திய வேளாண் துறையின் கீழ் செயல்படும் மத்திய விவசாய விளைபொருள்கள் விலை நிர்ணய ஆணையம் சார்பில் கரும்புக்கு ஆதரவு விலை நிர்ணயிப்பது தொடர்பான 2 நாள் கூட்டம் தில்லியில் வேளாண் அமைச்சகம் அமைந்துள்ள "க்ரிஷி' பவனில் திங்கள்கிழமை தொடங்கியது.

மத்திய விவசாய விளைபொருள்கள் நிர்ணய ஆணையத்தின் தலைவர் டாக்டர் அசோக் விஷன்தாஸ் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது. தமிழகம், ஆந்திரம், கர்நாடகம், ஹரியாணா, மஹாராஷ்டிரம், உத்தரப் பிரதேசம், பஞ்சாப் உள்பட அனைத்து மாநில அரசுகளின் விவசாயத் துறை அதிகாரிகள், சர்க்கரை ஆணையத்தின் அதிகாரிகள், விவசாயப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் பங்கேற்ற முத்தரப்பு கூட்டமாக இது அமைந்தது.

தமிழகம் சார்பில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக வேளாண் பொறியியல் பிரிவுத் துறைத் தலைவர் பேராசிரியர் பாலசுப்பிரமணியம், தமிழக வேளாண் துறை இணை இயக்குநர் பி. சங்கரலிங்கம், அனைத்து கரும்பு விவசாயிகள் சங்கங்கள் கூட்டமைப்பின் மாநிலத் தலைவர் வேட்டவலம் கே. மணிகண்டன், விவசாய சங்கப் பிரதிநிதிகள் குருநாதன் பொன்னையன், சண்முகராஜ் உள்ளிட்டோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதில் பங்கேற்ற அனைத்து விவசாயிகள் சங்க பிரதிநிதிகளும் கரும்புக்கான ஆதரவு விலையை உயர்த்த வேண்டும் என்று ஆணையத் தலைவரிடம் கோரிக்கை வைத்தனர்.

இது குறித்து வேட்டவலம் கே. மணிகண்டன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பருவமழை பொய்த்துப் போவது, தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் அல்லாடுவது, கரும்பு வெட்டுக் கூலி மற்றும் வாகன வாடகை உயர்வு உள்ளிட்ட காரணங்களை வலியுறுத்தி கரும்புக்கான ஆதரவு விலையை உயர்த்த வேண்டும் என்று கூட்டத்தில் வலியுறுத்தினோம்.

கடந்த ஆண்டு டன்னுக்கு ரூ.2,200 மட்டுமே நிர்ணயித்து கரும்பு விவசாயிகளை மத்திய அரசு வஞ்சித்தது. எனவே, வயல்வெளி விலையைக் கணக்கிட்டு, இந்த ஆண்டு கரும்புக்கான ஆதரவு விலையை டன்னுக்கு ரூ.3,500 ஆக நிர்ணயிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளோம்.

எங்களின் கோரிக்கை மத்திய அரசின் கவனத்துக்கு அனுப்பப்படும் என்றும், 3 மாதங்களுக்குள் அரசின் நிலை தெளிவுபடுத்தப்படும் என்றும் ஆணையத்தின் தலைவர் உறுதி அளித்தார்.

தமிழகத்தில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பை வெட்டி அனுப்பிய விவசாயிகளுக்கு அளிக்க வேண்டிய ரூ.675 கோடி நிலுவையில் உள்ளது. அவற்றை உடனடியாக கரும்பு விவசாயிகளுக்குப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளோம்' என்றார் மணிகண்டன்.

இதைத் தொடர்ந்து, சர்க்கரை ஆலை உற்பத்தியாளர்கள், இயற்கை எரிவாயு தயாரிப்பு சங்க நிர்வாகிகள் பங்கேற்கும் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளது.

## பண்ணைக் குட்டைகளால் பருத்தி, மிளகாய் மகசூல் அதிகம்

**முதுகுளத்தூர்,**

திருவரங்கம் ஊராட்சியில் பண்ணைக் குட்டைகள் அமைத்து கோடையில் பெய்த மழைநீரைத் தேக்கி பருத்தி, மிளகாய் உற்பத்தியை அதிகரிக்க செய்த ஊராட்சி மன்ற தலைவருக்கு கிராம மக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் திருவரங்கம் ஊராட்சியில் 25 பண்ணைக் குட்டைகளை அமைத்து, கால்வாய்கள் வெட்டி ஊரணிகளை மராமத்து செய்யப்பட்டது. இதனால் கோடையில் பெய்த மழையினால் பண்ணைக் குட்டைகளிலும், ஊரணிகளிலும் நீர்தேங்கியது. இதனால் திருவரங்கத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் பருத்தி, மிளகாய், எள், சோளம், கேழ்வரகு போன்ற பயிர்கள் அதிக அளவு மகசூலாகி உள்ளன என்று அப்பகுதி மக்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். இது குறித்து ஊராட்சி மன்றத் தலைவர் ஐ. மரியராஜ் கூறியதாவது: இப்பகுதி மிகவும் வறட்சியானது. போதிய மழை பெய்யாததால் நெல் அதிகமாக பயிரிடாமல் மக்கள் பருத்தி, மிளகாய் போன்ற வகைகளை பயிரிட்டனர். பண்ணைக் குட்டைகள் ஏற்படுத்தியதால் கோடையில் பெய்த மழைஉற்பத்தியை அதிகரிக்க விவசாயிகளுக்கு வாய்ப்பாக அமைந்தது என தெரிவித்தார்

## கறிக்கோழி பண்ணை கொள்முதல் விலை உயர்வு

**பல்லடம்**

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம் பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி.(பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது. ஞாயிற்றுக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 68 ஆக இருந்தது. கோழி இறைச்சி நுகர்வு அதிகரித்ததால் திங்கள்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 77 ஆக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ. 3.15, சென்னையில் ரூ. 3.40.

## சேவூரில் ரூ. 6 லட்சத்திற்கு நிலக்கடலை ஏலம்

**அவிநாசி,**

சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிலக்கடலை ஏலத்தில் வரத்துக் குறைந்து ரூ. 6 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது .

இந்த வாரம் நடைபெற்ற ஏலத்திற்கு, நிலக்கடலை 400 மூட்டைகள் வந்திருந்தன. குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ. 3,650 முதல் ரூ. 4,000 வரையிலும், இரண்டாவது ரக நிலக்கடலை, ரூ. 3,300 முதல் ரூ. 3,560 வரையிலும், மூன்றாவது ரக நிலக்கடலை ரூ. 2,750 முதல் ரூ. 3,200 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 6 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது. திருச்செங்கோடு, மணப்பாறை ஆகிய பகுதிகளில் இருந்து 9 வியாபாரிகளும், மலையப்பாளையம், தண்டுக்காரன்பாளையம், ராமியம்பாளையம், அன்னூர்,

மங்கரசுவலையபாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர் ஆகிய பகுதிகளில் இருந்து 75 விவசாயிகளும் ஏலத்தில் பங்கேற்றனர்.

## பசுந் தேயிலைக்கு கூடுதல் விலை நிர்ணயம் கோரி முதல்வருக்கு மனு

**கூடலூர்,**

கூடலூரிலுள்ள சாலிஸ்பரி கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையில், கூடுதல் விலை நிர்ணயம் செய்யக் கோரி, உறுப்பினர்கள் நலச் சங்கம் சார்பில் முதல்வருக்கு திங்கள்கிழமை மனு அனுப்பப்பட்டுள்ளது.

அந்த மனுவில், நீலகிரி மாவட்டத்தில் இயங்கி வரும் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் கடந்த மே மாதம் பச்சைத் தேயிலைக்கு ரூ.10 விலை நிர்ணயம் செய்தனர். இந்த விலை, விவசாயிகளுக்கு மிகவும் ஏமாற்றம் அளிக்கிறது. சிறு மற்றும் குறு, ஏழை விவசாய அங்கத்தினர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் துவக்கப்பட்ட டீ-சர்வ் கணினி ஏல மையத்தில் கடந்த 6 மாதமாக பச்சைத் தேயிலைக்கு விலை குறைவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம்.

விவசாயிகள் மீது மிகுந்த கருணையும் அக்கறையும் கொண்டுள்ள முதல்வர், எங்களது கோரிக்கைகளைப் பரிசீலித்து ஏற்கெனவே வழங்கியதுபோல, கூடுதல் விலையாக கிலோவுக்கு ரூ.15 கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து சங்கத் தலைவர் மற்றும் செயலாளர் தொழிற்சாலை வளாகத்தில் உறுப்பினர்களுக்கு கோரிக்கை மனு குறித்து விளக்கிய பிறகு, நிர்வாக இயக்குநர் சேகரைச் சந்தித்து மனுவின் நகலை அளித்தனர்.

## கால்நடைகளுக்கு மானிய விலையில் வைக்கோல் விநியோகம்

**அரூர்,**

அரூரில் கால்நடைகளுக்கு மானிய விலையில் வைக்கோல் (உலர் தீவனம்) விநியோகம் செய்யப்படுகிறது.

இதுகுறித்து கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் (அரூர்) அ.அர்த்தனாரி திங்கள்கிழமை கூறியது:

அரூர் ஒன்றியத்தைச் சேர்ந்த விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் தமிழ்நாடு அரசு சார்பில் வழங்கும் மானிய விலையிலான உலர் தீவனங்களைப் பெறலாம்.

இந்தத் தீவனம் கிலோ

ரூ.2-க்கு விற்பனை செய்யப்படுகிறது. உலர் தீவனம் பெற விரும்பும் விவசாயிகள் அரூர், கொங்கவேம்பு, பொன்னேரி, கோட்டப்பட்டி, சிட்லிங், கீரைப்பட்டி, கோபிநாதம்பட்டி கூட்டுரோடு, தீர்த்தமலை, மருதிப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள அரசு கால்நடை கிளை மருந்தகங்களை அணுகி தங்களது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளலாம்.

பெயர்களைப் பதிவு செய்த பிறகு வழங்கப்படும் அடையாள அட்டைகளைக் காண்பித்து விவசாயிகள் உலர் தீவனம் பெறலாம். கால்நடை வளர்ப்போர், விவசாயிகள் தங்களது பெயர்களைப் பதிவு செய்ய குடும்ப அட்டையின் நகல், புகைப்படம் அவசியம் தேவை.

வாரத்திற்கு ஒரு கால்நடைக்கு 21 கிலோ வீதம் மொத்தம் 105 கிலோ உலர் தீவனங்களை ஒவ்வொரு விவசாயியும் பெற முடியும். இந்த உலர் தீவனங்கள் அரூர் அரசு கால்நடை மருந்தக வளாகத்தில் (அரூர் அரசு மருத்துவமனை எதிரில்) விற்பனை செய்யப்படுகிறது.

முன்னதாக, அரூரில் கால்நடைகளுக்கான உலர் தீவனங்களை விவசாயிகளுக்கு உதவி இயக்குநர் அ.அர்த்தனாரி திங்கள்கிழமை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் அரசு கால்நடை உதவி மருத்துவர்கள் கோ.ராமகிருஷ்ணன், பொ.கனகசபை, ஆய்வாளர் சி.தண்டபாணி, விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## பரமத்திவேலூர் ஏலச் சந்தையில் மல்லிகைப் பூ விலை வீழ்ச்சி

**பரமத்திவேலூர்**

பரமத்திவேலூர் ஏலச் சந்தையில் திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்தில் மல்லிகை, சம்மங்கி பூக்களின் விலை சரிவடைந்தது. ஆனால், கோழிக்கொண்டை பூவின் வரத்துக் குறைவால், அதன் விலை உயர்ந்திருந்தது.

பரமத்திவேலூர் வட்டத்தில் அய்யம்பாளையம், கொளக்காட்டுப்புதூர், கரூர் மாவட்டம், சேமங்கி, வேலாயுதம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் குண்டுமல்லி, சாமந்தி, சம்மங்கி, அரளி உள்ளிட்ட பூக்கள் அதிக அளவில் பயிர் செய்யப்படுகின்றன. இங்கு விளையும் பூக்கள் பரமத்தி வேலூரில் நடைபெறும் தினசரி பூ ஏலச் சந்தைக்கு கொண்டுவரப்பட்டு ஏலம் விடப்படுகின்றன.

கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் குண்டுமல்லி கிலோ ரூ.420-க்கும், சம்மங்கி கிலோ ரூ.500-க்கும், அரளி கிலோ ரூ.130-க்கும், கோழிக்கொண்டை இரண்டு கட்டு ரூ.60-க்கும் ஏலம் போயின. திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்தில் குண்டுமல்லி கிலோ ரூ.100-க்கும், சம்மங்கி கிலோ ரூ.100-க்கும், அரளி கிலோ ரூ.90-க்கும், கோழிக்கொண்டையின் வரத்துக் குறைந்திருந்ததால் கட்டு ஒன்று ரூ.80-க்கும் ஏலம் போயின.

## சேலத்தில் ஜூன் 20-இல் விவசாயிகள் குறை கேட்புக் கூட்டம்

**சேலம்,**

சேலம் மாவட்ட விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் ஜூன் 20-ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறும் இந்தக் கூட்டத்துக்கு ஆட்சியர் க.மகரபூஷணம் தலைமை வகிக்கிறார்.

காலை 10.30 மணிக்கு தொடங்க உள்ள இந்தக் கூட்டத்தில், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு வேளாண்மை தொடர்பான

தங்களது குறைகளை நேரடியாகவோ, மனுக்கள் மூலமாகவோ தெரிவிக்கலாம் என்று மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

## 1500 ஏக்கரில் சமுதாய நாற்றாங்கால்

**திருச்சி**

டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடியை பூர்த்தி செய்ய 1500 ஏக்கரில் சமுதாய நாற்றாங்கால் அமைக்கப்பட உள்ளது. இதற்கென ரூ. 32 கோடியே 95 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வேளாண்மைத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜூன் 12-ல் மேட்டூர் அணை திறக்கப்படவில்லை. இதை கருத்தில் கொண்டு டெல்டா விவசாயிகள் குறுவை சாகுபடி செய்ய ஏதுவாக தமிழக அரசு சிறப்புத் திட்டங்களை அறிவித்தது.

பொதுவாக குறுவைப் பணிக்கான நாற்றாங்கால் தயாரிக்கும் பணி மே, ஜூன் மாதத்தில் விவசாயிகள் முடித்து விடுவர். அப்போதுதான் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் பயிர்கள் அறுவடை செய்யும் நிலையில் இருக்கும். அதேநேரம் விதைப்பு பணி ஜூலைக்கு பிறகு நடைபெறுமானால் வடகிழக்கு பருவ மழையால் பயிர்கள் சேதமடைந்து அறுவடை செய்ய முடியாமல் வீணாகிவிடும்.

இதனால், மேட்டூர் அணை திறப்பது தள்ளிப் போனால் குறுவை பயிரிட தயங்கி, விவசாயிகள் ஒரே போகமாக சம்பா விதைத்து விடுவர்.

இதை கருத்தில் கொண்டு தமிழக அரசு சமுதாய நாற்றங்கால் முறையை அறிமுகப்படுத்தியது. அதாவது போர்வெல் உள்ள விவசாயிகள் நாற்றுகளை தயார் செய்வர். ஆற்றுப் பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகள் அவர்களிடமிருந்து நாற்றுகளை வாங்கி நடவு செய்வர். இதன்மூலம் தண்ணீர் இல்லாமல் நாற்றுகள் காய்ந்து விடும் என்ற பயமும், பருவ மழையில் அறுவடை சிக்கிக் கொள்ளும் என்ற கவலையும் விவசாயிகளிடம் இருக்காது.

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், திருச்சி, அரியலூர் ஆகிய டெல்டா மாவட்டங்களில் 1500 ஏக்கரில் சமுதாய நாற்றாங்கால் பயிரிடப்பட உள்ளதாகவும், மேலும் களை எடுக்கும் இயந்திரம், நடவு செய்யும் இயந்திரம், உரங்கள், குழாய்கள் உள்ளிட்ட விவசாய பொருள்கள் வழங்க ஏதுவாக ரூ. 32 கோடியே 95 லட்சம் அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் வேளாண்மைத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கூடலூரில் கன மழை:மக்கள் மகிழ்ச்சி

**ஊட்டி:** நீலகிரி மாவட்டம் கூடலூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கனமழை பொழிகிறது. இதனால் இதமான சூழ்நிலை நிலவுவதால் மக்கள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## 400 விவசாய குழுக்கள் அமைப்பதில் சிக்கல்: மவுனம் காக்கும் டெல்டா மாவட்ட அதிகாரிகள்



குறுவை சாகுபடி சிறப்பு திட்டத்திற்கு, 400 விவசாய குழுக்கள் அமைக்கும் விவகாரத்தில், டெல்டா மாவட்ட வேளாண் அதிகாரிகள், கடும் குழப்பம் அடைந்துள்ளனர்.

டெல்டா மாவட்டங்களுக்கான, குறுவை சாகுபடி சிறப்பு திட்டத்தை, சமீபத்தில், முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். அதன்படி, பாசனத்திற்கு தண்ணீர் எடுத்து செல்ல, பாசனக் குழாய்கள்; ஒரு லட்சம் ஏக்கருக்கு நெல் நுண்ணூட்ட கலவை, துத்தநாக சல்பேட்; 50 ஆயிரம் ஏக்கருக்கு உயிர் உரங்கள், திரவ உயிர் உரங்கள்; 60 ஆயிரம் ஏக்கருக்கு ஜிப்சம் ஆகியவை, இலவசமாக வழங்கப்பட உள்ளன.

## குறுவை சாகுபடி:

விவசாய தொழிலாளர்கள் பற்றாக்குறையை சமாளிக்க, 200 விவசாய குழுக்கள் அமைத்து, அவர்களுக்கு, நான்கு கோடி ரூபாய் செலவில், நெல் நடவு இயந்திரங்கள் வழங்கப்பட உள்ளன. இதேபோல், மேலும், 200 விவசாய குழுக்கள் அமைத்து, அவர்களுக்கு, 60 லட்சம் ரூபாய் செலவில், களையெடுக்கும் கருவிகள் வழங்கப்பட உள்ளன. குறுவை சாகுபடி சிறப்பு திட்டத்தை செயல்படுத்த, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், திருச்சி, அரியலூர் மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. ஆனால், நெல்நடவு இயந்திரங்களை பயன்படுத்தும், 200 விவசாய குழுக்கள் மற்றும் களையெடுக்கும் கருவிகள் பயன்படுத்தும், 200 விவசாய குழுக்கள் தேர்வு இன்னும் துவங்கவில்லை. குறுவை சாகுபடி விவசாயிகள், வேளாண் துறை அதிகாரிகளை தினமும் சந்தித்து, தங்களை குழுவில் சேர்க்கும்படி வலியுறுத்தி வருகின்றனர். ஆனால், டெல்டா மாவட்ட நிர்வாகங்கள் மற்றும் வேளாண்துறை அதிகாரிகள் அமைதி காத்து வருகின்றனர். அரசு தரப்பில், அரசாணை வெளியிடப்படாததே இதற்கு காரணம் என, அவர்கள் கூறி வருகின்றனர்.

## அரசாணை:

இதுகுறித்து, டெல்டா மாவட்ட வேளாண்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: முதல்வர் அறிவிப்பு வெளியிட்டாலும், அரசாணை வெளியான பிறகே, உயர் அதிகாரிகள் எங்களுக்கு உத்தரவு பிறப்பிப்பர். அதன் பிறகே, விவசாய குழுக்கள்

அமைக்கும் பணியை துவங்குவோம். விவசாயிகள் பலரும், எங்களை தொடர்பு கொண்டு வருகின்றனர். இதில், குறுவை சாகுபடியில் ஈடுபடுபவர்கள் யார் என்பதை கண்டறிந்த பிறகே, அவர்களை பயனாளியாக சேர்க்க முடியும். இப்போதே, பணிகளை துவங்கினால் மட்டுமே, குறித்த காலத்திற்குள், 400 குழுக்களையும் அமைக்க முடியும். ஆனால், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எத்தனை குழுக்கள்; அதில் எத்தனை பேர் இடம்பெறுவர் போன்ற விவரங்களை கூட, சென்னையில் உள்ள உயர் அதிகாரிகள், இதுவரை தெரிவிக்கவில்லை. கடைசி நேரத்தில், பணிகளை மேற்கொண்டால், சரியான பயனாளிகளை தேர்வு செய்ய முடியாது என்பதையும் விளக்கி விட்டோம். அதற்கும், உயர் அதிகாரிகளிடம் இருந்து பதில் இல்லை. அதனால், இந்த விஷயத்தில், நாங்கள் ஒன்றும் செய்வதற்கு இல்லை. இவ்வாறு, அவர் கூறினார்.

## வயலூர் ஏரி ரூ.38.50 லட்சத்தில் சீரமைப்பு! 500 ஏக்கர் பாசனம் பெற வாய்ப்பு

**விருத்தாசலம் :** தமிழக அரசின் மரபுசாரா நீர் நிலைகள் மேம்பாட்டுத் திட்டம் மூலம் 38.50 லட்சம் ரூபாய் மதிப்பில் வயலூர் ஏரி சீரமைக்கும் பணி நடந்து வருகிறது.

விருத்தாசலம் நகராட்சி வயலூரில், 199 ஏக்கர் பரப்பளவிலுள்ள ஏரியை தமிழக அரசின் பொதுப்பணித் துறை பராமரித்து வருகிறது. இதன் மூலம் வயலூர், எருமனூர், வடவாடி கிராமங்களில் 500 ஏக்கருக்கும் மேல் பாசன வசதி பெற்று வருகின்றன.கடந்த 10 ஆண்டுகளாக ஏரிக்கரை மற்றும் நீர்ப்பிடிப்பு பகுதிகளை தனியார் சிலர் ஆக்கிரமித்துள்ளனர். மேலும், கரைகள் சேதமடைந்து, ஏரியின் பரப்பளவு குறைந்துள்ளதால், நீர்பிடிப்பு அளவு குறைந்தது. இதனால், பானத்திற்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு சம்பா, குறுவை பட்டங்களில் நெல் சாகுபடி பணிகள் பாதித்தன.இந்நிலையில், விருத்தாசலம் - விழுப்புரம் என இரு வழி ரயில் பாதை அமைக்கும் பணியை மேற்கொண்ட "எல் அண்ட் டி' நிறுவனம்

கடந்த ஆறு மாதங்களுக்கு முன், வயலூர் ஏரியில் மண் எடுக்க கிராமத்தினரை அணுகினர்.

அதற்கு கிராம, மக்கள் மண் எடுக்க அனுமதிக்கின்றோம் ஆனால், மண் எடுத்து முடிந்ததும் கரைகளை பலப்படுத்தி, ஏரியை ஆழப்படுத்தித் தரவேண்டும் என நிபந்தனை விதித்தனர். அதனை ஒப்புக் கொண்ட அந் நிறுவனத்தினர் ராட்சத இயந்திரங்களைக் கொண்டு, ஏரியில் ஆங்காங்கே மெகா சைஸ் பள்ளங்களை தோண்டி, மண் எடுத்தனர். இதனால் ஏரியில் பல இடங்களில் பத்து முதல் 15 அடி ஆழம் வரை பள்ளம் ஏற்பட்டது.தேவையான மண்ணை எடுத்துக் கொண்ட நிறுவனத்தினர் ஆழமான பள்ளங்களை சரிசெய்யாமல், கரையை பலப்படுத்தாமல் அப்படியே விட்டுச் சென்றனர்.இதனால், கடந்த பருவ மழையின் போது ஏரி பள்ளத்தில் தேங்கி நின்ற தண்ணீரை விவசாய பாசனத்திற்கு பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டதால் சம்பா சாகுபடி செய்த விவசாயிகள் பாதித்தனர்.

பின்னர் வயலூர் ஏரியை புனரமைக்க வேண்டுமென அப்பகுதி விவசாயிகள் பொதுப்பணித் துறையிடம் கோரிக்கை விடுத்தனர். அதைத் தொடர்ந்து தமிழக அரசின் மரபுசாரா நீர்நிலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மதகு, கலங்குகளை சீரமைத்து, கரைகள் பலப்படுத்தும் பணிகளுக்காக 38.50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.

கடந்த இரண்டு வாரங்களாக நீர் வரத்து, பாசன வாய்கால்கள், மதகு, கலங்கு ஆகியவை சீரமைக்கும் பணி நடந்து வருகின்றன. இதனால் வரும் பருவ மழையின் போது ஏரியில் நீர்பிடிப்பு அதிகரித்து பாசனத்திற்கு தேவையான தண்ணீர் கிடைக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## வெளிநாடுகளில் உற்பத்தி துவக்கம்; இந்திய பண்ணை இறால் விலை வீழ்ச்சி

**ராமநாதபுரம் :** வெளிநாடுகளில் வளர்ப்பு இறால் உற்பத்தி துவங்கியதால், இந்தியாவில் இருந்து ஏற்றுமதியாகும் பண்ணை இறால் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

சீனா, தாய்லாந்து, ஜப்பான் உள்ளிட்ட தெற்காசிய நாடுகளுக்கு இந்தியாவில் இருந்து இறால், நண்டு, கணவாய் போன்ற கடல் உணவு பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இந்நாடுகளில் இறால் தேவை அதிகரித்ததால் இந்தியாவில் குறிப்பாக ஆந்திரா, தமிழக கடல் பகுதிகளில் 30 ஆண்டுகளுக்கு மேலாக பண்ணைகளில் வளர்க்கப்பட்ட இறால் ஏற்றுமதி செய்யப்பட்டது. இருந்தாலும் 'ஆர்டர்'படி, இறால்களை அனுப்ப முடியவில்லை.குறைந்த நாட்களில் வளரக்கூடிய அமெரிக்காவின் 'டைகர் மோனோடன், வனாமி, ஸ்கேம்' ஆகிய தாய் இறால்கள் ஆந்திரா, தமிழகத்தில் அதிகம் வளர்க்கப்படுகின்றன. 90 நாட்களில் 30 கிராம் எடை பருமன் வளரும் தன்மையுடைய வனாமி இறால், கிலோ ரூ.500 வரை வெளிநாடுகளில் விலைபோனது. இறால் தேவை நாளுக்கு நாள் அதிகரித்ததால் அவாமி வகை இறாலை சீனா, தாய்லாந்து நாடுகளே, சில மாதங்களுக்கு முன் வளர்க்க துவங்கின. இதனால் தமிழகத்திலிருந்து ஏற்றுமதியான இறால் விலை, தற்போது படுவீழ்ச்சி அடைந்துள்ளது.

மேலும் 'வைரஸ்' பரவலால் அழிவு ஏற்படுவதை தடுக்க, பருவம் எட்டும் முன் இறால்களை அறுவடை செய்ய பண்ணை உரிமையாளர்கள் முடிவு செய்தனர். இதன்படி ராமநாதபுரம் மாவட்டத்தில் 500க்கும் மேற்பட்ட பண்ணைகளில், சில நாட்களாக இறால் அறுவடை செய்யப்படுகிறது.கடல் உணவு ஏற்றுமதி நிறுவன நிர்வாகி முருகேசன் கூறும்போது: பல ஆண்டுகளாக தெற்காசிய நாடுகளுக்கு

இறால், நண்டு, கணவாய் மீன்கள் இந்தியாவில் இருந்து லட்சக்கணக்கான டன் ஏற்றுமதி செய்யப்பட்டன. அங்கு தற்போது இறால் வளர்ப்பு துவங்கியுள்ளதால் ஏற்றுமதி கணிசமாக குறையத்துவங்கியது. இதனால் ஒரு மாதத்தில் கிலோவுக்கு ரூ.200 விலை குறைந்து, பண்ணை உரிமையாளர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. மேலும் பாக்டீரியா பாதிப்பால் வெண்புள்ளி நோய் தாக்குதல் அச்சத்தால் உரிய வளர்ச்சியடையாத நிலையில், 15 கிராம் எடையில் வனாமி இறால் அறுவடை செய்யப்படுகிறது. கடல் உணவு ஏற்றுமதி நிறுவனங்கள் பண்ணைகளில் இருந்து கொள்முதல் செய்யும் இறால்களை, இருப்பு வைக்க இயலாமல் திணறி வருகின்றன, என்றார்.

## பரவலாக மழை பெய்ததால் மானாவாரி சாகுபடி துவக்கம்

**சங்கராபுரம் :** சங்கராபுரம் பகுதியில் மானாவாரி பயிர் சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சங்கராபுரம் பகுதியில் கடந்த இரு ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால் ஏரி, கிணறு போன்ற நீர் நிலைகள் வறண்டன. இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்தது. கிணறுகளில் போதிய அளவு தண்ணீர் இல்லாததால் பெரும்பாலான விவசாயிகள், நிலங்களை கரம்பாகவே போட்டு வைத்துள்ளனர்.இந்நிலையில் கடந்த 15, 20 நாட்களாக, சங்கராபுரம் பகுதியில் பரவலாக மழை பெய்தது. இதனால் பூமி ஈரப்பதம் அடைந்துள்ளது. விவசாயிகள் நிலத்தை உழுது மானாவாரி பயிர்களான கம்பு, எள், சோளம், கேழ்வரகு போன்ற மானாவாரி பயிர் சாகுபடி செய்வதற்கான பணிகளை துவக்கி உள்ளனர்.

## இலவச கால்நடை மருத்துவ முகாம்

**திண்டிவனம்** : முன்னாள் எம்.பி., ஈராசந்த் நினைவு நாளை முன்னிட்டு தரம்சந்த், ஈராசந்த் சேரிடபிள் டிரஸ்ட், கால் நடை பராமரிப்பு துறை சார்பில் பெலாகுப்பம் ஊராட்சி வேம்பூண்டி கிராமத்தில் கால் நடை மருத்துவ முகாம் நடந்தது. ஈராசந்த்தின் மகன்கள் பப்லசா, ஜின்ராஜ், நவீன்குமார் முன்னிலை வகித்தனர். கால்நடை மருத்துவ உதவி இயக்குனர் டாக்டர் குருவையா தலைமை தாங்கினார். உதவி மருத்துவர்கள் ராஜேந்திரன், மோகன், சரவணன், உதவியாளர்கள் ஆறுமுகம், கஜேந்திரன் கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தனர். ராஜசேகர், பாலாஜி, செந்தில், கிரி சார்பில் அரசு மருத்துவமனையில் உள் நோயாளிகளுக்கு ரொட்டி வழங்கினர். டிரஸ்ட் சார்பில் காந்திசிலை அருகில், மேம்பாலம் கீழ் பகுதிகளில் அன்னதானம் வழங்கினர். நகர செயலர் தீனதயாளன்,முன்னாள் மரக்காணம் சேர்மன் ஏந்தூர் நடராஜன், மயிலம் ஒன்றிய ஜெ., பேரவை செயலர் காளிதாஸ், கருணாமூர்த்தி, பாசறை மாவட்ட செயலர் ஜெயபிரகாஷ், கவுன்சிலர்கள் ஜனார்த்தனன், வேணுகோபால் மற்றும் ஜாகீர் உசேன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## வானூர் கரும்பு விவசாயிகள் மரவள்ளி சாகுபடியில் ஆர்வம்

**வானூர் :** வானூர் பகுதியில் மரவள்ளி கிழங்கு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

வானூர், வி.புதுப்பாக்கம், நைனார்பாளையம், ரங்கநாதபுரம், ஒட்டை, நாராயணபுரம், காட்ராம்பாக்கம் ஆகிய பகுதியில் விவசாயிகள் அதிகளவில் கரும்பு சாகுபடி செய்து வந்தனர். கரும்பு பயிர் சாகுபடி செய்ய ஆண்டு

தேவைப்படுவதுடன், கட்டிங் ஆர்டர் கிடைப்பதில் தாமதம் ஏற்படுகிறது.ஆலைக்கு கரும்பு சப்ளை செய்த பின், பண பட்டுவாடா கிடைப்பதிலும் பிரச்னை எழுகிறது. இதனால், கரும்பு பயிர் சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டுவதில்லை.இந்த பகுதியை சேர்ந்த விவசாயிகள், தற்போது மரவள்ளி சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். எட்டு மாத பயிரான மரவள்ளியில் மணிலா, உளுந்து போன்றவற்றை ஊடுபயிர் சாகுபடி செய்தால், பத்து மாதத்தில் அறுவடை செய்கின்றனர். சாகுபடி செலவு ஒரு ஏக்கருக்கு 5 ஆயிரமும், களை எடுத்தல், கட்டை மடித்தல் உள்பட ஆள் கூலி 7 ஆயிரம் ரூபாயும் செலவாகிறது. மரவள்ளி செடி ஏக்கருக்கு குறைந்தது 12 டன்னில் இருந்து 17 டன் வரை மகசூல் கிடைக்கிறது. மொத்த செலவு போக ஒரு லட்சம் ரூபாய் ஏக்கருக்கு லாபம் கிடைப்பதால் மரவள்ளி சாகுபடி செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## முட்டை விலை 315 காசாக உயர்வு

**நாமக்கல்:** தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 315 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 304 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 11 காசு அதிகரித்து, 315 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 340, பெங்களூரு, 330, மைசூர், 330, ஹைதராபாத், 290, மும்பை, 327, விஜயவாடா, 285, கொல்கத்தா, 330, பர்வாலா, 272, டில்லி, 285.

இவ்வாறு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், நேற்று, நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, 57 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில், நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர்கள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, 68 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## சூரிய ஒளியில் மின்மோட்டார்கள் விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்

**தேனி** : சூரிய ஒளியில் இயங்கும் மின்மோட்டார்கள் பொருத்த விருப்பம் உள்ள விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என விவசாய பொறியியல் துறை தெரிவித்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கை: விவசாயிகளுக்கு 5 குதிரை திறன் உள்ள சூரிய ஒளி மூலம் இயங்கும் பம்புகள், தானாக சூரிய ஒளி நோக்கி திரும்பக்கூடிய சூரிய ஒளி தகடுகள் அமைப்புடன் ஆழ்குழாய் மற்றும் திறந்த வெளி கிணறுக்கான நீர்மூழ்கி பம்ப் செட்டுகள் மற்றும் தரை மட்ட நீர் தேக்க தொட்டிக்கான மோனோ பிளாக் செட்டுகள் வழங்கப்பட உள்ளன. ஆழ்குழாய் கிணறுக்கு நீர் மூழ்கி மோட்டார் மானியமாக, அரசு மானியமாக 3 லட்சத்து 35 ஆயிரத்து 200 ரூபாய் வழங்கப்படுகிறது.விவசாயிகள் பங்களிப்பாக ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 750 ரூபாய் செலுத்த வேண்டும். திறந்த வெளிக்கிணறு மோட்டார் மானியமாக, 3 லட்சத்து 84 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. விவசாயிகள் பங்களிப்பாக ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 512 ரூபாய் வழங்கப்பட வேண்டும். தரைமட்ட நீர் தேக்க தொட்டி மானியமாக 3 லட்சத்து 99 ஆயிரத்து 872 ரூபாய் வழங்கப்படும். விவசாயிகள் பங்களிப்பாக ஒரு லட்சத்து 24 ஆயிரத்து 778 ரூபாய் செலுத்த வேண்டும். கூடுதல் விவரங்களுக்கு விவசாயிகள்

தேனி விவசாய பொறியியல் துறை உதவி செயற்பொறியாளரை 04546-251555 என்ற எண்ணிலும், உத்தமபாளையம் உதவி செயற்பொறியாளரை 04554-265132 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ள வேண்டும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

### இன்றைய வேளாண் செய்திகள்

## விவசாயிகளுக்கு ரூ.9 கோடி பயிர்கடன் ஆய்வுக் கூட்டத்தில் கலெக்டர் தகவல்



தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் அரசு நலத்திட்ட கடன்கள் மற்றும் பல்வேறு கடன் வழங்குதல் குறித்து ஆய்வுக் கூட்டம் கலெக்டர் விவேகானந்தன் தலைமையில் நடந்த போது எடுத்த படம்.

**தர்மபுரி** மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் 1,670 விவசாயிகளுக்கு ரூ.9 கோடியே 12 லட் சம் பயிர்கடன் வழங் கப்பட்டுள்ளது என்று ஆய்வுக்

கூட்டத்தில் கலெக்டர் விவேகானந் தன் தெரிவித்தார்.

**ஆய்வுக்கூட்டம்**

தர்மபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் இவ் வங்கியுடன் இணைக்கப்பட்ட தர்மபுரி மாவட்டத்திலுள்ள 132 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் அரசு நலத்திட்ட கடன்கள் உட்பட பல்வேறு கடன் வழங் குதல் குறித்து ஆய்வுக் கூட்டம் கலெக்டர் அலுவலகத் தில் நடைபெற்றது. கூட்டத் திற்கு கலெக்டர் விவேகானந் தன் தலைமை தாங்கினார். இதில் தர்மபுரி மாவட்ட மத்திய கூட் டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் பாண்டியன், முதன்மை வரு வாய் அலுவலர் பழனிசாமி, கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர்கள் இளங் கோவன், அர்த்தனாரி மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

**கூட்டத்தில் கலெக்டர் தெரிவித்ததாவது:-**

நடப்பு நிதியாண்டில் தர்ம புரி மாவட்டத்திற்கான பயிர் கடன் குறியீடான ரூ.102 கோடியில் இதுவரை 1670 விவசாயிகளுக்கு ரூ.9 கோடியே 12 லட்சம் வழங் கப்பட்டுள்ளது. மத்திய கால முதலீட்டுக் கடனாக ரூ.35 லட்சமும், பண்ணை சாராக் கடன் 216 பேருக்கு ரூ.24 லட்சமும,¢ வீட்டு வசதி மற்றும் வீடு அடமானக் கட னாக ரூ. 15 லட்சமும், விவசாயி களுக்கு தானிய ஈட்டுக்கடனாக ரூ.79 லட்சமும், மகளிர் தொழில் முனைவோர் கடன் ரூ.1 லட்ச மும், பணிபுரியும் மகளிர் கட னாக ரூ.2 லட்சமும், மாற்றுத் திறனாளிகளுக்கான கடனாக ரூ.2 லட்சமும் வழங்கப்பட் டுள்ளது.

**ஒருநாள் பயிற்சி**

தர்மபுரி மாவட்டத்திற்கென நிர்ணயிக்கப்பட்ட கடன் குறி யீட்டை தொய்வின்றி அடைய வும், இக்கடன்களுக்கு தமிழக அரசு, மத்திய அரசு மற்றும் பிற நிறுவனங்களால் வழங்கப் படும் பல்வேறு மானியங்களை பயனாளிகளுக்கு பெற்று வழங்கி, அவர்கள் பயனடைய கூட்டுறவு வங்கியும், தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களும் உரிய நட வடிக்கை எடுக்க வேண்டும். நாட்டுக்கோழி வளர்ப்புக்கான மத்திய கால முதலீட்டுக் கடன் கள் வழங்குவதற்கு தர்மபுரி மாவட்டத்திற்கென நிர்ணயிக் கப்பட்ட இலக்கை தொய் வின்றி அடைய வேண்டும்.

மேலும் பல்வேறு கடன் களுக்கு தமிழக அரசு, மத்திய அரசு மற்றும் பல்வேறு நிறு வனங்களால் வழங்கப்படும் மானியம், வட்டி மானியம் குறித்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலர்களுக்கான ஒரு நாள் பயிற்சி முகாமை உரிய அலுவலர்களை கொண்டு நடத்தவேண்டும்என்று கலெக் டர் அறிவுறுத்தினார்.
இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார்.

## கொடைக்கானலில் பேரிக்காய் சீசன் தொடங்கியது



**கொடைக்கானல்,** பகுதியில் பேரிக்காய் சீசன் தொடங்கி உள்ளது.

## பேரிக்காய் சீசன்

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மலைப்பகுதியில் உள்ள பள்ளங்கி, வில்பட்டி, அட்டுவம்பட்டி, பேத்துப்பாறை, பெருமாள்மலை, வடகவுஞ்சி ஆகிய இடங்களில் பேரிக்காய்கள் அதிக அளவு விளைகின்றன. இதில் வால்பேரிக்காய், முள்பேரிக்காய், தண்ணீர் பேரிக்காய், ஊட்டி பேரிக்காய், நாட்டு பேரிக்காய் என பல்வேறு வகைகள் உள்ளன. மருத்துவக் குணம் கொண்ட இந்த பேரிக்காய்களை பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் விரும்பி சாப்பிடுகின்றனர். குறிப்பாக கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அதிக அளவு பேரிக்காய்களை விரும்பி வாங்குகின்றனர்.

இத்தகைய சிறப்பு மிக்க பேரிக்காய் சீசன் தற்போது தொடங்கி உள்ளது. அதில் வால்பேரிக்காய் விளைச்சல் அதிகரித்து உள்ளது. இதே போல் நாட்டு பேரிக்காய் உள்ளிட்ட பல்வேறு பேரிக்காய்கள் வரத்து தொடங்கி உள்ளது. அவற்றில் வால்பேரிக்காய் கிலோ ரூ.80–க்கும், தண்ணீர் பேரிக்காய், ஊட்டி பேரிக்காய் கிலோ ரூ.50–க்கும், நாட்டு பேரிக்காய் கிலோ ரூ.20–க்கும் விற்பனை ஆகிறது.

## விலை அதிகரிப்பு

நாட்டு பேரிக்காய் சீசன் வருகிற அக்டோபர் மாதம் வரை நீடிக்கும். இன்னும் சில மாதங்களில் விளைச்சலுக்கு ஏற்றாற் போல் பேரிக்காய் வகைகள் விலை இன்னும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது. பேரிக்காய் சீசன் தொடக்கத்திலே நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**பெரம்பலூரில், 19–ந் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**

**பெரம்பலூர்,** மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 19–ந் தேதி(வியாழக்கிழமை) காலை 10 மணிக்கு பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட மன்றத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் நீர்ப்பாசனம், வேளாண்மை சம்பந்தப்பட்ட கடன் உதவிகள், வேளாண்மை இடுபொருட்கள், வேளாண்மை எந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும். விவசாயிகள் அன்றைய தினம் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது குறைகளை தெரிவிக்கலாம் என மாவட்ட கலெக்டர் தரேஸ் அஹமது தெரிவித்துள்ளார்

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**முட்டை விலை 315 காசாக நிர்ணயம்**



**நாமக்கல்:** நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடைபெற்றது. இதில், முட்டை பண்ணை கொள்முதல் விலையில் 11 காசுகள் உயர்த்தி, 304 காசில் இருந்து 315 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. கோடை விடுமுறைக்கு பின் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளதால், சத்துணவு திட்டத்துக்கு தினமும் 70 லட்சம் முட்டைகள் சப்ளை செய்ய வேண்டியுள்ளது. இதனால் முட்டைக்கு கடந்த இரு வாரமாக தமிழகத்தில் கிராக்கி ஏற்பட்டுள்ளதால் முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.